

திருவண்ணாமலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்று வரும், இலவச ஜெராக்ஸ், நூலகம் மற்றும் உள்ள மக்கள்நல பணிகளை சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அவர்கள் ஆய்வு செய்தார். உடன் ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன், சு.ராஜாங்கம் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் வேண்டுகோள்!

சென்னை, மே.31-

அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளுக்கு மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் விடுத்துள்ளவேண்டுகோள் வருமாறு

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் இந்திய அளவில் மேம்படுத்தி காட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் ‘தமிழ் நாட்டை செதுக்கிய சிற்பி”, மே1 ஐ இந்தியா முழுமைக்கும் தொழிலாளர் தினமாக அறிவிக்க காரணமாக இருந்ததுடன், ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்து, பொதுவுடைமை தோழர்களே சாதிக்காத சாதனையை நிகழ்த்தி காட்டிய அற்புத தலைவர் சென்னையில் மே தின நினைவு சின்னம் நிறுவிய தலைவர்.

தமிழ்நாட்டில் சிறுகுறு மற்றும் பெருந்தொழில்கள் வர காரணமாக இருந்து, பல லட்சம் இளைஞர்கள் இன்றைக்கு வேலை வாய்ப்பு பெற பணிபுரிய காரணமான ‘உன்னத தலைவர்” சிப்காட், சிட்கோ உட்பட பல லட்சக்கணக்கான சிறு தொழில்கள் வர ஊக்கமளித்த அற்புதத் தலைவர்.

தொழிலாளர்களின் நலனில் தீவிர கவனம் செலுத்தியவரும், தனியார் முதலாளிகளின் தொழிலாளர் விரோத போக்கை அகற்றிட, பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கிய தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர்.

**அமைப்புசாரா நலவாரியங்கள்!**

அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டு 2006 2011 திமுக ஆட்சியில், தமிழ்நாட்டில் 65ற்கும் மேற்பட்ட தொழில்களில் பணியாற்றி வரும் பல லட்சம் தொழிலாளர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கான உத்திரவாதம், சமூக பாதுகாப்பு இல்லாத நிலையில் இருந்ததை கண்டறிந்து, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான வாழ்வாதார உத்திரவாதம் கிடைத்திட வும், சமூக பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் சட்டங்கள் மூலம் பெறும் பலன்களை அமைப்பு சாரா தொழிலாளர்களும் பெறவும், அமைப்பு சார்ந்த தொழிலாளர்கள் பெறும் சலுகைகள், அமைப்புசாரா தொழிலாளர்கள் பெறும் வகையில்,

‘தொழிலாளர் நல வாரியங்களை” உருவாக்கி அதில் அவர்களை உறுப்பினராக்கி அடையாள அட்டைகளை பெற்று நலவாரியத்தில் கொடுத்து, ஓய்வூதிய பலன் உட்பட அனைத்தையும் பெற்றுக் கொள்ளும் மாபெரும் திட்டத்தை தந்து, கோடிக்கணக்கான அமைப்புசாரா தொழிலாளர்களின் வயிற்றில் பால் வார்த்தவர் ‘முத்தமிழறிஞர் கலைஞர்” என்பதை யாராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

**திமுக அமைப்புசாரா ஓட்டுநர் அணி**

2022 ம் ஆண்டு “திராவிடமாடல் அரசின் நாயகர்” முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் அமைப்புசாரா ஓட்டுனர்களாக பணிபுரியும் சுமார் 15 லட்சத்திற்கு மேற்பட்ட ஓட்டுனர்களையும், மேற்படி சலுகைகளை தவறவிடாமல் பெற்று தந்திட ‘திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி” என்கிற அமைப்பையும் உருவாக்கி தந்து தமிழ்நாடு முழுவதும் பல ஆயிரம் நிர்வாகிகளை நியமித்து, மாபெரும்விழிப்புணர்வை ஏற்படுத்திய பெருமை நம் தலைவரையே சேரும்.

2004ம் ஆண்டில் மறைந்த முதல்வர் அம்மையாரால் ஒழிக்கப்பட்ட பழைய ஓய்வூதிய திட்டம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் மீண்டும் உயிர் பெற்ற திட்டம்.

அரசு ஊழியர் ஆசிரியர்கள் ஏற்கனவே பெற்று வந்த பழைய ஓய்வூதிய திட்டத்தை ஒழித்து, பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வந்து, அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய துரோகம் செய்தது அதிமுக அரசு.

சுமார் 22 ஆண்டுகால அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கையான ‘பழைய ஓய்வூதிய திட்டத்தை” மீண்டும் கொண்டு வந்து, அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி தந்தவர் நமது கழகத்தலைவர் தளபதியார் அவர்கள்.

மக்கள் மறந்தாலும், மேற்கண்ட இமாலய சாதனைகளை அவ்வப்போது நினைவூட்டுகிற வகையில் மேற்படி திட்டங்களுக்கெல்லாம் காரண கர்த்தாவான, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழ்நாட்டின் சிற்பி, திராவிட இயக்கத் தலைவர், முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளான ஜுன் 3 அன்று தமிழ்நாடு முழுவதும் அமைப்புசாரா ஓட்டுனர் அணி நிர்வாகிகள், அமைப்புசாரா ஓட்டுனர்கள் பணிபுரியும் வாகனங்களான ஆட்டோ, கார், பஸ், வேன், லாரிகள் போன்ற வாகன நிறுத்தங்களில் கழகக் கொடியேற்றி வைத்து அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்டங்களை வழங்கி சிறப்பாக கொண்டாடுமாறும், மேற்படி பணிகள் சிறப்பாக நடந்திட, மண்டல , மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் அளவில் உள்ள அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் ஒருங்கிணைத்திட வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு

# தி.மு.க. மாநில மகளிரணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

### கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் - மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி அறிக்கை!

சென்னை, மே 31-

கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அரிய பல ஆலோசனைகள் வழங்க இருக்கிறார்.

13.6.2026 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கூட்டம் நடைபெறுகிறது. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், பிரச்சாரக் குழு, வலைதளக்குழு, ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்களின் மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் அளப்பரிய சாதனைகளைப் படைத்த நம் திராவிட மாடல் அரசு, எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தது என்ற அதிர்ச்சியும், ஆச்சரியமும், நமக்கு மட்டுமல்ல, நடுநிலையாளர்கள், நல்லிதயம் படைத்தோர், அத்தனை பேர் உள்ளத்திலும் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மீண்டு, நம்மை பலப்படுத்திக் கொள்ளவும், தோல்வியை, வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றிடவும், இந்த முக்கியமான தருணத்தில் நம் கழகப் பணி எவ்வாறு அமைந்திடல் வேண்டும் என ஆலோசனை கூறவும், நம் கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த முக்கியமான கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், கணியூர் பேரூராட்சி முன்னாள் செயலாளரும், பேரூராட்சி முன்னாள் தலைவருமான கழக மூத்த முன்னோடி தி.சேதுராமன் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். அவரின் உடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் மு.ஜெயக்குமார் ஆகியோர் கழக கொடி போர்த்தி இறுதி அஞ்சலி செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# பழையன கழியாமலும் புதியன புகலாம்!

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே!”

என்று கூறும் நம் பழந்தமிழ் நூலான நன்னூல்!

இது தமிழ் மரபு மட்டுமில்லை, இதுவே உலகளாவிய இயற்கை நெறியும் கூட!

எனினும், பழையன எல்லாவற்றையும் கழித்து விட வேண்டும் என்பது இதன் பொருள் ஆகாது! அப்படி அனைத்தையும் நம்மால் கழித்து விட முடியாது, கழித்திட வேண்டிய தேவையும் இல்லை!

பழையனவற்றில் தேவையற்றவை களையும், பொருளற்றவைகளையும் கழித்து விடுக என்பதே இதன் உட்பொருள்!

இதுகுறித்த சிந்தனை இப்போது நம் அனைவருக்கும், குறிப்பாக இயக்க உணர்வாளர்கள் அனைவருக்கும் தேவைப்படுகின்றது!

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், நமக்குச் சில படிப்பினைகளைத் தந்திருக்கிறது! அதே நேரம், சில தவறான முடிவுகளை நோக்கியும் சிலரைத் தள்ளி இருக்கிறது!

30 வயதுக்குட்பட்ட இன்றைய இளம் பிள்ளைகள் பலர், சமூக வலைதளங்களுக்குள் (குறிப்பாக insta, reels போன்றவற்றில்) சிறைப்பட்டிருப்பதைத் தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன! ஆகவே நாமும் இனிமேல் முழுமையாக அவை போன்ற சமூக வலைதளங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று பலர் கருதுகின்றனர்!



**சுப.வீரபாண்டியன்**
திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர்

இது சரியான பார்வைதான்! ஆனால், இவை மட்டுமே போதுமானவை, நீண்ட கட்டுரைகளோ, கருத்தரங்குகளோ இனிமேல் தேவையில்லை என்ற முடிவுக்கு நாம் வந்தால், அது ஆபத்தானது!

விஞ்ஞானத்தோடு சேர்ந்து ஓடாத எவரும் வீழ்ந்து போவார்கள் என்பது உண்மை! ஆதலால், புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளை நாம் கைக்கொண்டே ஆக வேண்டும்!

அதே நேரம், ஆழ்ந்த, விரிவான கட்டுரைகளையும், ஆழமான செய்திகளைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய கருத்தரங்குகளையும் நாம் ஒரு நாளும் கைவிட்டு விடக்கூடாது!

எந்த ஒரு வரலாறும், கொள்கை கோட்பாடும் இல்லாதவர்கள், அரை நிமிடத்திலும் ஒரு நிமிடத்திலும் வேடிக்கை காட்டி விட்டுப் போய்விடலாம். ஆனால் நீண்ட, நெடிய சமூக வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இயக்கத்தினர், அப்படிச் சில நிமிடங்களில் தங்கள் பணியை முடித்துக் கொண்டு விட முடியாது, கூடாது!

அப்படிச் செய்தால், பிற்காலத்தில் நமக்கு எந்த ஓர் ஆவணமும் இல்லாமல் போய்விடும்!

இந்தியாவில் செழித்து வளர்ந்திருந்த பௌத்த மதத்தை, இந்து மதம் எப்படி ஆட்கொண்டது என்பதையும் நாம் இங்கே நினைத்துப் பார்ப்பது நல்லது!

பௌத்தத்தின் எல்லாக் கூறுகளையும் இந்து மதம் கழித்து விடவில்லை; சிலவற்றை உள்வாங்கிச் செரித்துத் தன் வயமாக்கிய பிறகு, தன் சனாதனக் கொள்கையை அதன் மீது திணித்தது! எதிர் நிலையில் உள்ளவர்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, இந்த எடுத்துக்காட்டு!

இந்தியாவில் குப்தப் பேரரசு ஆட்சி நடந்த காலத்தில், அது வரையில் மக்களிடம் வெகுவாகப் பரவியிருந்த பௌத்த மதத்திற்குச் சில சிக்கல்கள் ஏற்பட்டன என்று கிபி 5 ஆம் ஆண்டு நூற்றாண்டில், இந்தியாவிற்கு வந்த ஃபாஹியான் (Fa Hien) என்னும் சீனப் பயணி, தன் பயணக் குறிப்பில் எழுதி இருக்கிறார். பிறகு ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு, அதே சீனாவில் இருந்து வந்த யுவான் சுவாங் என்னும் பயணி, பௌத்தம் அழிந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார்!

அந்தக் காலகட்டத்தில் தோன்றிய சங்கராச்சாரியார், பௌத்த மதத்தின் அகிம்சை, புலால் மறுத்தல் போன்ற கோட்பாடுகளைத் தன்மயம் ஆக்கிக் கொண்டு, சங்கர மடத்தை நிறுவு கின்றார்! மடத்தின் வழியாக (விஹாரை), மக்களை அணுகுவது என்பதும் பௌத்தம் காட்டிய வழிதான்! அதனால்தான் ஆதிசங்கரரைப் “பிரசன்ன பௌத்தர்” (மறைமுக மாகப் பௌத்தத்தை உள்வாங்கியவர்) என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பர்!

இப்போது புதிதாக முளைத்திருக்கும் சில கட்சிகளும், பெரியார், அம்பேத்கர் போன்ற நம் தலைவர்களைத் தங்கள் கொள்கைத் தலைவர்கள் என்று முன்னிறுத்திக் கொண்டு, திராவிட மாடல் அரசின் திட்டங்களையே கொஞ்சம் மிகுதிப்படுத்திச் சொல்லி (top up), புதிய தொழில்நுட்ப வழிமுறை களின் மூலம் இளைஞர்களை அணுகுகின்றனர்!

நாமும் இன்று மீண்டும் புதிதாய்ப் பிறக்க வேண்டி உள்ளது!

புதிய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளை சரியாகப் பற்றி நின்று, அந்த வடிவங்களையும், அந்த அணுகுமுறைகளையும் பயன்படுத்திக் கொள்வதோடு, கருத்தரங்குகள், செறிவான கட்டுரைகள், இயக்கக் கலந்துரையாடல்கள் போன்ற வடிவங்களையும் விடாமல் தொடர்ந்திட வேண்டும்!

பழையன கழியாமலும் புதியன புகுவோம்!

# நீலகிரி மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிவிப்பு!

உதகை, மே 31-

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் நாளை (1.6.2026 திங்கட்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவைதலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் மற்றும் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.திராவிடமணி ஆகியோர் முன்னிலையில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில், கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள்உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: 1. முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் - “புத்தெழுச்சி நாள்” நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து.

2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



161–வது வட்ட இளைஞர் அணி–மாணவர் அணி–பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.இக் கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதிகுணாளன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார்,பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஜாகீர்உசேன்,சொ.சஞ்சீவி வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அபிஷேக், வட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரவீன்குமார் மற்றும் இளைஞர் அணி – மாணவர் அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.